# ஆழித்தாயே அழித்தாயே...

சுனாமி கடற்கோள் காவியம்



ஆர். எம். நௌஸாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழித்தாயே அழித்தாயே..

*(சுனாமி கடற்கோள் காவியம்)*

'தீரன்.' ஆர்.எம். நௌஸாத்

**அபாபீல்கள் வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Aalzhiththaaye Alzhiththaaye

..........Verses for Tsunami..........

By; Theeran. R.M. Nawshaad

Published 'Abaabeels'

Tp : 0714457593.

185/2 Old Market Road

Sainthamaruthu-01

rmnawshad@gmail.com

இந்நூலாசிரியரின் ஏனைய நூல்கள்......................

***வல்லமை தாராயோ... (சிறுகதைகள்)***

***நட்டுமை (நாவல்)***

(தமிழ் நாடு காலச்சுவடு இதழ் நடத்திய சு.ரா. நினைவு நாவல் போட்டியில் முதற் பரிசு பெற்றது)

***வெள்ளி விரல்... (சிறு கதைகள்)***

(2011 இன் இலங்கை அரசின் சாஹித்திய விருது பெற்றது)

***கொல்வதெழுதுதல் 90 (நாவல்)***

(தமிழக அரசின் ஆயிரம் பிரதிகளுக்கான அரச ஆணை பெற்றது)

***அபாயா-என் கறுப்பு வானம்***

(மின்நூல் - பிரதிலிபி வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# ஆழித்தாயே அழித்தாயே..

*(சுனாமி கடற்கோள் காவியம்)*

'தீரன்.' ஆர்.எம். நௌஸாத்

2004.12.26 ம் திகதி -- காலை 9.00 மணியளவில் இந்தோனேசியக் கடலில் ஏற்பட்ட புவியதிர்வு காரணமாக உருவான இராட்சத சுனாமி அலைகள் தென்கிழக்காசிய நாடுகளைத் தாக்கி -- சுமார் இரண்டு இலட்சம் மக்களைக் கொன்றொழித்து -- இலங்கையில் ஏறக்குறைய நாற்பத்திரண்டாயிரம் பேரைப் பலியெடுத்து -- இலங்கையின் கரையோரப் பகுதிகளையும் பாரிய அழிவுக்குள்ளாக்கியது. இக் கடற்கோள் அனர்த்தம் காரணமாக -- இயற்றப்பட்ட சுனாமி; கடற்கோள் காவியம் இது.


முதற்பா.......................................................தீவு முழுவதும் ஆழிச் சீற்றம்.

இரண்டாம் பா...............................................சுனாமிக் கும்மி

மூன்றாம் பா.................................................சாய்ந்தமருது அழிந்த காதை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

| | | | |
|---|---|---|---|
| சோதிமுதல் | ஓதும்பொருள் | ஆதிபுகழ் | ஞாலமெல்லாம் |
| ஆதியிறை | ஏகபொருள் | வாரியிறை | ஞானமெல்லாம் |
| ஆதிமுதல் | ஈதுவரை | மீதியுள | காலமெல்லாம் |
| மேதியினில் | சோதிபுகழ் | ஓதிடுவேன் | உள்ளமெலாம். |

## ஸலவாத்

| | | | |
|---|---|---|---|
| முழுமதி | பொழியொளிர் | எழில் | முகமது |
| இறைவழி | ஒழுகிடும் | நபி | முஹமது |
| திருநபி | மொழிவழி | தனில் | அகமது |
| மொழிகிற | நபிபுகழ் | தனி | லுருகிடும். |

## அவையடக்கம்

| | | |
|---|---|---|
| முன்னோர்தமை | பின்பற்றி | ஒருகாவியம் |
| வண்ணமுறத் | தீட்டுகிறேன் | இதுகாவியம். |
| எண்ணுகிறேன் | ஏகனிறை | இதுகாரியம். |
| யாப்பறியேன் | நவ்ஸாத் | காரியப்பர்நான் |
| ஏர்ப்படைசூழ | ஏருழவரை | நேரியவாட்சி |
| ஓர்ப்படச்செய்த | மீர் ராஸிக் | காரியப்பர் தன் |
| பொற்புடைமாது | ஹாஜறாநல் | மாதுசிரோண்மணி |
| மூத்தபுதல்வன் | பிதற்றலிது | பொறுத்தருள்வீர். |

## சமர்ப்பணம்

கரையுடைத்துக் கடல்பொங்கித் தரை கடந்து தாவி வர
துறைகடந்து விரைந்தேகிய சாய்ந்தமருது மக்களை
அரவணைத்து ஆதரவளித்த
சம்மாந்-துறை மக்கள் தமக்கே அர்ப்பணம் இந்நூல்

## உள்ளுறை

இரண்டா யிரத்தோர் நான்கா மாண்டுபதின் இரண்டா மாதமீர்
பத்தாமாறாம்நாளில் உருண்ட பூமியோர திர்வால் ஆழிபொங்கித்
திரண்டதால் தீவும் எமதூரு மழிந்தமை.

2004.12.26.

முதற்பா:- தீவு முழுவதும் ஆழிச் சீற்றம்.
இரண்டாம் பா:- சுனாமிக் கும்மி.
மூன்றாம் பா:- சாய்ந்தமருது அழிந்த காதை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவு முழுவதும் ஆழிச்சீற்றம்

ஓ...ஓ...
சூரிய சந்திர மண்டலங்களுடன்..நல்ல மண்டலங்களுடன்..
சீரிய சுந்தரக் காட்சிகளுடன்...நல்ல காட்சிகளுடன்
கடற்கரை மணல் வெளிகளிலே.
படுத்திருந்தோம்.....நல்ல படுத்திருந்தோம்.....

இடைக்கிடை கடல் அலைகளிலே..நல்ல அலைகளிலே..
குளித்துடல் மகிழ்ந்திருந்தோம்.....நல்ல மகிழ்ந்திருந்தோம்..........
ஓ...ஓ....சொல்லு

நாட்டம் பிறந்தது நாடுக ளழிந்திட
சீற்றம் பிடித்தொரு சுனாமி யழித்திட
தேட்டம் மிகுந்த தெற்குத் துறையுட்பட
நாட்டின் கரைகளில் மரணக் கறைப்பட

வாட்டிய போரால் வதங்கிக் கிடந்த
வடக்கு கிழக்கின் கரைகள் கடந்து
தாக்கி யழித்தது சுனாமித் துறையலை
மாத்தறை தொடக்கம் பருத்தித் துறைவரை ........ சொல்லு ........

பருத்தித் துறையில் சுண்டிக் குளத்தில்
உருத்தி ரம்கொண்டு கொக்கூ ரலம்பில்
திரியாய்த் துறைகட்டு வன்குச்ச வெளியும்
திருகோ ணமலை யுப்புவெளி முட்டியது

முட்டிய ழித்தது மோதிச் சாய்த்தது
சுற்றிய சுனாமி தோப்பூர் சம்பூரை
கட்டிய சீனக் குடாவூர் துறையதை
வெட்டிப் பிளந்தது ஆழப் புதைத்தது. ........ சொல்லு ........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிப் புதைந்தன கிண்ணி யாகரை
கோளப் புத்தூர் மண்ணின் வாகரை
வாழைச் சேனையு மேறா வூரும்
தாழங் குடாவும் தாவடி யூரும்

பாளைச் செட்டிக் காத்தான் குடியும்
களுதா வளையும் களுவான் குடியும்
களுவிப் பிழிந்தது சுனாமி யலையது
பளுகா மம்வரை பயங்கரம் செய்தது. ........ சொல்லு ........

பயங்கரம் செய்தது பட்டிருப் பதுவும்
ஐங்கரன் பற்றும் ஆரையம் பதியும்
கிங்கரர் கட்டிய கல்லாறுப் பாலமாம்
சங்கரஞ் செய்தது கந்தர்க் கோளமாய்

மங்காப் புகழுறு மருத முனையை
கங்குரம் பாயும் பாண்டியர் பூமியை
தங்கம் விளையும் கல்முனை நகரதை
அங்கம் சிதைத்தது வங்கக் கடலலை. ........ சொல்லு ........

வங்கக் கடலலை சாய்ந்த மருதினைத்
துங்கம் புகுந்த வெண்கக் கடையெனப்
பங்கம் பண்ணி மாளிகைக் காட்டினில்
பொங்கிப் பாய்ந்தது ஆழியில் ஆழ்த்தி

பத்தினிக் கோயில் பதிகாரை தீவைச்
சித்தில மாக்கித் தந்தது சாவை
முஸ்தபா வாய்க்கால் முழுக்கத் தாழ்த்தி
இஷ்டமாய் வயல்களை அழித்தது ஆழ்த்தி. ........ சொல்லு ........

ஆழ்த்தி யழித்து ப்பொத்துவில் யாலத்
தாழ்நிலம் பிளக்கத் தந்துற தாழ
ஆழ்கடல் பாய்ந்தது அம்பாந் தோட்டை
மூழ்கடித் ததின்னும் காலிக் கோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்கரை திக்வலை ஊர்களை அமிழ்த்தி
சூள்கரை மாத்தறை தங்காலை தகர்த்து
நீள்கரம் நீட்டிப் பேரலை புகுந்து
வாழ்வரம் அழித்தது மன்னுயிர் குடித்தது.. ........ சொல்லு ........

மன்னுயிர் குடித்தது பெந்தொட்ட பீச்சினில்
தன்னுருக் கெட்டது பேர லை வீச்சினில்
அம்பலங் கொடலையை அடித்தது வீழ்த்தி
பம்பலாய்ச் சவங்கள் பிடித்தது விழுங்கி

நீள்வுதிக் கடுவை நீள்ரயில் இரண்டினை
பேரலை தாக்கிப் பெட்டிகள் புரண்டன
ஓரலை எழுந்தது நீளமாய்ப் பாய்ந்தது
நீரலை ஊரெலாக் சூரணம் செய்தது. ........ சொல்லு ........

சூரணம் செய்தது சுனாமி புகுந்தது
காரண மாகப்ப லப்பிட்டி யுடைந்தது
பூரண மாகபே ருவளை களுத்தறை
ஊறின நீரினில் ஊர்களின் களுத்துவரை

தாரணச் சுந்றுலா பாணந் துறையிலும்
மோதர வத்தள கல்கிஸ்ஸ வரையிலும்
தூறடி பின்னோடி முன்னோடி வந்தது.
பேரணிப் பேரலை யாழ்நகர் பாய்ந்தது ........ சொல்லு ........

யாழ்நகர் பாய்ந்தது ஆனை யிறவை
பாழ்நகர் ஆக்கி வல்வைத் துறையை
ஊழிப் பேரலை ஊர்காவற் துறையை
ஆழிக் கடலில் ஆழ்த்திய தறவே

கண்டம் முறித்தது காங்கன் துறையின்
அண்டக் சரித்தது கோவில்த் துறையை
பண்டத் தரிப்பைச் சுவாமி மலையை
துண்டம் தறித்தது சுனாமி யலைகள் ........ சொல்லு ........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரலைச் சுனாமி காவுகள் கொண்டது
நீரலை மூடித் தீவுதன் னுண்டது
ஒன்பது ரிச்டரில் இத்தனை அழிவாமோ
ஐம்பது வந்திடின் இலங்கை யிருக்குமோ

மாறிலி வேகத்தில் மரணங்கள் தந்தாய்
ஏறிநீ ஊருக்குள் ஏனோடி வந்தாய்
ஊழிப் பெருவினை யோபித்துப் பிடித்தோ
ஆழிக் கோளேநீ ஆயிரமூ ரழித்தாய். ........ சொல்லு ........

ஆயிரம் ஊரழித் தாயேநீ ஆயிரம்
மாயிரம் உயிரெடுத் தாயுன் னைப்பல்
லாயிரம் தடவை தாயென் றுசொன்ன
வாயிரம் மக்களுக் குஞ்சதி செய்தாய்.

சதிசெய்த காவியம் சொன்னேன் பாரேன்.
விதிசெய்த காரிய மென்றே கூறேன்
கவிசெய்வ திலிவன் என்னே சூரன்
இதுசெய்த னித்தவன் பேர்தான் தீரன். ........ சொல்லு ........

(பாட்டுக் கட்டி ஏட்டில் இட்டு மெட்டுப் போட்டுக்
காட்டும் தீரன் வாழி. ஜல். தில் ஜல் ஜக்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமிக் கும்மி

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி

வெட்டவெளி ஆகாயத்தில் வட்டவடிவான பூமிப் பந்தின்
விட்டத்தடிக்கடலுக்குள்ளே பீறிட்டெழுந்திடும் சுனாமியடி

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி

தட்டுமாறி ஓட்டுப் பாறை சற்றுத் தூரத்தில் தள்ளிவிட
தட்டுப்பாறைத் தள்ளிக்கிளம்பி தந்திடும் சுனாமியைச் சொல்லியடி

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி

கட்டுமீறிக் கடலை முந்து முட்டிப்பிளந்திடும் மூர்க்க அலைகள்
எட்டிப்பாயும் பே ரலைகள் நாட்டையழித்திடும் சுனாமியடி.

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி

தட்டழிந்து தாறுமாறாய் அட்டதிக்கும் ஆர்ப்பரிக்கும்
இட்டமுடன் எட்டிப்பாய்ந்து தாக்கியழித்திடும் சொல்லியடி

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி

கிட்டக்கிட்ட ஆழிச்சுழல் சுருட்டியிழுக்கும் ஆழிக்குள்ளே
கட்டவிழ்த்துக் கடுவேகத்துடன் உச்சத்தில் பாயும் சுனாமியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி
கட்டுப்பாட்டை மீறிக்கடல் திட்டுமணல் ஏறிவரும்
கெட்டலைந்து ஊரையடித்து ஆழிக்கோள் காவுகள் கொள்ளுமடி

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி

நாட்டையழித்த மூர்க்கச் சுனாமியைப் பாட்டில் சொன்னவர்தமக்குள்ளே
ஏட்டில்வடித்து நாட்டுக்களித்தவன் பாட்டில் தீரனென்று சொல்லியடி..

கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி
கும்மியடி கும்மியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாய்ந்தமருது அழிந்த காதை

என் செல்ல மகளாரே..
நான் பாடும் பாட்டினைக் கேளாயோ..
என் செல்ல மகளாரே..
நான் பாடும் பாட்டினைக் கேளாயோ..

01. இரண்டா யிரத்து நாலாம் ஆண்டு
புரண்டமா ர்கழி இருபத் தியாறு
அரண்டகா லையெட்டு நாற்பத் தியாறு
திரண்டதோ ரலை சுனாமிய தன்பேரு.

02. சுனாமிய தன்பேரு பாய்ந்தது மருதூரு
கனாவிலு மதனைக் கண்டதிலை மகளாரு
அம்மாடி யம்மாடி எப்படிச் சொல்லுவது
எண்ப தடியெழுந் தெட்டியது பாய்ந்தது.

03. பாய்ந்த அலையின் பயங்கரக் காட்சி
சாய்ந்த மருதினை அழித்தது தாக்கி
சூழ்ந்த சுனாமியைப் பாட்டினில் வார்த்து
தேர்ந்த தமிழினில் ஏட்டினில் கோர்த்து

04. கோர்த்தெ டுத்துக் கோரத்தைச் சொல்ல
ஆர்த்த லையின் அவலத்தைச் சொல்ல
பார்த்த நிந்தொரு பாட்டினில் சொல்ல
கேட்ட முதவிழி நீரினில் மூழ்க.

05. மூழ்கிக் குளித்து நீந்திக் களித்தே
வாழப் பழகிய உன்மக் கள்மீதே
ஊழியே நீலியே சுனாமியே வந்தாய்
ஆழியே சீலியே சீறியேன் பாய்ந்தாய்.

06. பாய்ந்தது முதலலை உயிர்களு மாழ்ந்தன
தாழ்ந்த நிலமெலாம் தாழுண்டு மூழ்கின.
வேய்ந்த வீடெலாம் வேகத்திலு டைந்தன
ஆழ்ந்த ஆழியில ள்ளுண்டு போயின


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. போயின வீடுகள பேரலை யடிபட்டு
ஆயின தூசுகள் மாடங்கள் பொடிபட்டு
தாண்டிய கடலலை தரைகளைத் தாக்கிற்று.
அண்டிய பிராணிகள் பறவைக ளழிந்திற்று.

08. அழிந்தன கட்டுவலை வள்ளங்கள் தோணிகள்
ஒழிந்தன கட்டுமனை இல்லங்கள் காணிகள்.
ஆழ்ந்தன திட்டுமணல் மையித்துகள் நெருங்கின.
தாழ்ந்தன போட்டுகள் மதில்கள் நொறுங்கின

09. நொறுங்கின கடைகள் மரங்கள் வீடுகள்
ஒதுங்கின பாரிய விட்டங்கள் ஓடுகள்
சொருகியே தள்ளின செத்த உடல்களை
பெருகியே பாய்ந்தது இரண்டாம் கடலலை

10. கடலலை பெருகுது மறுபடி வருகுது
கதறினர் பதறினர் கல்புகள் உருகுது
எதுவரை யோடுவ தெப்படித் தப்புவது
கடல்கரை யுடைத்துக் கடிதினில் வந்தது.

11. வந்த சுனாமி யதுமோதி யுடைத்திட
அழிந்த தாயிர மனைத்து ம்விட்டிடப்
பறந்தனர் பாதையில் நெரிசலில் முட்டினர்
இறந்தன ரிடையினில் வயோதிபர் சிக்கினர்

12 சிக்கினர் மூழ்கினர் மற்றவ ரோடினர்
தூக்கினர் சாத்தினர் விட்டவர் தேடினர்
மாவடிப் பள்ளிவீதி ம'ஸர் வெளியாமோ
கூறடி பாய்வதும் மனிதக் கடலாமோ

13. கடலுக்குப் பயந்தவர் கார்களி லேறினர்
இடம்விட்டு ஓடுமுன்ன திருப்பது சுருட்டினர்
சிறுவர்கள் கதறினர் சிக்கியுயிர் இழந்தனர்
ஒருவரை யொருவர் மயிரென மறந்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மறந்தனர் விரைந்தனர் வாகன மேறினர்
சரிந்தனர் சம்மாந் துறைக் கேகினர்
இழிந்தனர் பெண்டிரைக் கைவிட் டோடினர்
இழிசனர் நெஞ்சினில் இறைவனை மறந்தனர்.

15. மறந்தக ணவர்கள் மனைவியை இழந்தனர்
பதறிய மனைவியர் கணவரை இழந்தனர்
பறந்தனர் மழலைகள் கைவிட் டிழந்தனர்
உதறினர் சொந்தங்கள் தாமட்டும் பிழைத்தனர்

16. மட்டிலாப் பயத்தினில் திகைத்துச் சிலபேர்
கட்டிட இடிபாடு களில் சிக்கினர்
தட்டுமா றிப்பலர் தத்தம் அன்பரை
விட்டிட மனமின்றி கட்டியே மூழ்கினர்

17 மூழ்கினர் பாய்ந்தது மூன்றா மலையதும்
ஊழ்வினை சூழ்ந்தது ஊரை யழித்தது
வாழ்வினைக் காவு கொண்ட கணங்களில்
வைதனர் ஊரினில் மீதியுள சனங்களும்

18. சனங்கள் செறிந்த காரியப்பர் நகரதில்
சுனாமி சீறிப் புகுந்த ழித்ததில்
வணங்கு மிறையைக் கூவிக் கதறியே
சனங்கள் சவங்க ளாகிச் சிதறியே

19 சிதறினர் கடற்கரை வாசிகள் மீனவர்
பதறிய மழலைச் சிறுசுக ளானவர்
மிதந்ததைக் கண்டவர் உயிர்காத்து மீண்டனர்
அமிழ்ந்தனர் ஆழியில் ஆள்மாறி மாண்டனர்

20 மாண்டனர் தோணாத் தொங்கலி லிருந்தவர்
கண்டனர் ஓரலை உச்சி மீறிவரக்
கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்
என்பவர் போலவர் அக்கணம் மரித்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மரித்த சிசுகள் கண்டசி லைபண்டிர்
சிரித்தனர் பயத்தால் சித்தமி ழந்தனர்
உரிந்த புடவையும் மறந்த நோயவர்
விரிந்த தலையுடன் விசருத் தாயவர்

22. தாயவர் தந்தவ முதுண்டு ஓதப்பள்ளி
சேயவர் போயினர் மூழ்குண்டு மீளாப்பள்ளி
தாயவர் பதறினர் பைத்திய மாயினர்
தூயவர் சிறுவ ரள்ளுண்டு போயினர்.

23. போயினர் இன்னும் மல்'குஸ் ஸம்ஸில்
சேயினர் தொங்கினர் கூரையி லுச்சியில்
ஏங்கினர் ஓடினர் பட குத் துறையதும்
தாங்கிய பாலமும் தறிபட்டு முறிந்ததை

24. முறிந்ததைக் கண்டனர் தோணாத் திடலில்
மிதந்ததைக் கண்டனர் மீனவ ருடல்கள்
சரிந்தது அல்ஜலால் மாணாக் குவி யல்
தெரிந்தது பள்ளிமா ணவிக ளுடல்கள்

25. உடல்கள் றியாஸுல் ஜன்னாப் பள்ளியுடன்
கடலுள் மறைந்த காலக் கொடுமை
வைத்திய சாலையும் றிஸ்வி டொக்டரும்
விவசாயக் கந்தோரும் ஒஸ்மன் வீதியும்.

26 ஒஸ்மன் வீதியில் வீடுகளை முறித்துப்
பஸ்ப மாக்கிப் பாடாய்ப் படுத்தி
சாஹிறா வீதியில் சவங்கள் தள்ளி
ஆஹிறம் அழித்துப் பாய்ந்தது சுனாமி

27. பாய்ந்தது கலியாண ரோட்டு வரையிலும்
சாய்ந்தம ருதூரைப் போட்டுக் குதறியே
நூற்றுக் கணக்கினில் போட்டுக் களள்ளி
தீற்றித் திணித்தது மோட்டு வளைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | மோட்டு | வளைகளை | மோதிவி | ழுத்தி |
| | ரோட்டு | முழக்கவும் | போட்டுக் | குதறி |
| | மார்க்கட் | ரோட்டும் | மக்கள் | கடையும் |
| | மூர்க்கச் | சுனாமி | மோதிக் | குடைந்து |
| 29. | மோதிக் | குடைந்தது | பாளிகா | ரோட்டை |
| | பாதியு | டைத்தது | மாளிகைக் | காட்டை |
| | எட்டிப் | பாய்ந்தது | பொம்பிளாச் | சந்தை |
| | வெட்டிப் | பிளந்த | வேகத்தில் | கந்தை |
| 30. | கந்தை | யாச்சுது | பீச்சுக் | கோட்டலும் |
| | சங்கம் | சேர்ந்த | மீனவர் | கோட்டமும் |
| | கடலோ | ரங்கட்டிய | ஹுஸைன் | வித்தியமும் |
| | கடலோ | டுபோச்சுது | அந்தோ | பரிதா பம். |
| 31 | பரிதா | பம்மிஞ்சி | எதுவு | மில்லை |
| | கடலோ | ரம்வாழ்ந் | ததடமு | மில்லை |
| | பாளிகா | முதலாய் | மாளிகா | வீறாய் |
| | ஆழிய | யடித்த | தத்தனையும் | தூளாய். |
| 32. | தூளான | ஊரான | தே யென | வழுது |
| | ஆளாள் | அறியா | மலைந்த | பொழுது |
| | ஓங்கியொ | குபாங்கின் | சத்தம் | கேட்டினர் |
| | சாய்ந்த | மருதூர் | பள்ளியை | நா டினர் |
| 33. | நாடினவன் | செய்தனன் | நாமெந்த | மட்டுக்கு |
| | ஓடித்தப்பி | யவரார் | மரணம | தைவிட்டு |
| | வேடிக்கை | மனிதரே | வேகத்தை | விடுங்கள் |
| | நாடிக்கை | யேந்தியிறை | பாதத்தில் | வீழுங்கள். |
| 34. | வீழுங் | களிறை | பள்ளியில் | தொழுது |
| | கேளுங் | களிறை | வனிட | மழுது |
| | எங்க | ளிறைவனே | ஏகப்பெரும் | பொருளே |
| | தங்க | நபிகளைத் | தந்தபரம் | பொருளே. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பொருளும் பொன்னும் அளித் தவன்நீ
உயிரும் உடலும் அளிப் பதும்நீ
அருமை நபிகள் ரஸூலின் பொருட்டால்
சீறும் சுனாமியைத் தணித்தருள் அல்லாஹ்.

36. அல்லாஹ் வருளது சுனாமி தணிந்தது
எல்லா வழியிலும் ஆழிதி ரும்பியது
எந்த இடத்திலு மையித்துக் குவிந்தது
வந்த வரத்தினில் பள்ளிநி றைந்தது.

37. நிறைந்த வுடலெல்லாம் பெண்களும் சிறுவரும்
குறைந்த அளவினில் ஆண்களும் தவிரவும்
அங்க வீனர்களும் அதிகம் இருந்தனர்
எங்கு மடுக்கிப் பள்ளி நிறைந்தன.

38. நிறைந்த உடல்களை அடையாளம் கண்டு
விரைந்து குளிப்பாட் டிக்கபனு மிட்டு
தரைகள தோண்டும் வாகனம் கொண்டு
விரைந்து கபுறுகள் தோண்டி அடக்கி..

39. அடக்கத் தலங்களும் அழிந்து போனதில்
அடக்கினர் வளவெல்லாம் நூற்றுக் கணக்கில்
அடங்க வில்லை பள்ளியும் குறைக்கு
அடக்க வனுப்பினர் சம்மாந் துறைக்கு.

40. சம்மாந் துறையில் மலையடிக் கிராமம்
எம்மாத் திரந்தான் கபுரடிக் கம்பம்.
ஆயிரக் கணக்கில் மையித்துக் கும்பம்
சாய்ந்த மருதினில் மட்டுமூ வாயிரம்

41. ஆயிரம் அழுகுரல் ஆறுரையார் தேற்றிவிட
ஆயிரம் அவலங்கள் ஆரிடமார் கூறிவிட
எத்தனை பாவங்கள் செய்தமோ இப்பேரழிவு
இத்தனை காலமும் எமக்கில்லை இச்சீரழிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | சீரழி | வில்லை | சீவராசி | பலதுக்கு |
| | ஓர்நாழி | முன்னமே | உள்ளாறி | வதங்கு |
| | பேரழி | வருமென் | றுணர்வா | லறிந்தன |
| | ஓராழி | வருமென்று | ஓடோடித் | தப்பின |
| 43. | தப்பின | பறப்பன | நடப்பன | கணக்கின்றி |
| | அப்பின | ஊர்வன | வாயிரக் | கணக்கினில் |
| | கட்டின | பிராணிகள் | தப்பமுடி | யவில்லை |
| | பூட்டின | பறவை ப | றக்கமுடி | யவில்லை |
| 44. | இல்லை | நுண்ணறி | வாறறிவு | மாந்தரும் |
| | இல்லிடம் | தேடினர் | ஓடினராங் | கிங்கனும் |
| | இல்லை | யொரு | பொருளும் | மாய்ந்தனர் |
| | அல்லா | அல்லா | எனக்கத்திக் | காய்ந்தனர் |
| 45. | காய்ந்த | வெய்யிலில் | மாவடிப் | பள்ளியில் |
| | சாய்ந்து | கிடந்தனர் | மாய்ந்து | மயங்கினர் |
| | மெய்யோ | விதுவோ | வாழிடமோ | கிளியே.. |
| | ஐயோ | விதியோ | ஆருசெய் | தபழியோ.. |
| 46. | செய்த | பழியே | துமில்லை | கிளியே |
| | செய்ய | நினைத் | தவன்செய | லிதுவே |
| | வையத் | தினர்க்கு | வல்லவன் | வே தம் |
| | ஐயம் | திரிபறச் | சொல்லும் | பாடம். |
| 47. | பாடம் | படித்த | பாலர்மு | தற்கொண்டு |
| | பாடம் | மறந்த | பாட்டியர் | வரையீண்டு |
| | அபயம் | தந்தது | சம்மாந் | துறைதான் |
| | உபயம் | தந்ததும் | எம்மாத் | திரந்தான். |
| 48. | எம்மாத் | திரம் | சனத் | திரளுக்கும் |
| | அம்மாத் | திரம் | சாப்பா | டளித்தும் |
| | தம்மாந் | தரைப் | போலத் | தவித்தனர் |
| | சம்மாந் | துறை | மக்களு | தவினர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. உதவினர் சாய்ந்த மருதுக் கோடிவந்து
உறவினர் போலவர் எம்மைத் தேடிவந்து
சிதைவுகள் கண்டனர் சித்தம் நடுங்கினர்
முதல்வேலை மையித்து களப்புறப் படுத்தினர்

50. அப்புறப் படுத்தினர் டிப்பரி லேற்றினர்
துப்புரவு செய்தனர் துணிக்கப விட்டனர்.
தொண்டர் குவிந்தனர் தோண்டி முடித்தனர்
அண்டம் குலுங்கிட அறபியி லோதினர்

51. ஓதிய சேதிகள் உலகினில் ஒலித்தன
மோதிய சுனாமிமு கத்திலு மிழ்ந்தன.
ஓடியே வந்தன ஊடகப் பாயிரம்
தேடியே பரப்பின செய்திக ளாயிரம்.

52. ஆயிரம் சேதிகள் சுடச்சுடத் தந்தனர்
ஆயிரம் மின்னஞ்சு ஊடகத் துறையினர்
கண்டனர் தொலைக்காட்சி வானொலி விமர்சனம்
இன்டனெ ட்டிலும் நேரடித் தரிசனம்.

53. தரிசனம் காணாமற் தேடித் தேடி
புரிசனெங் கேடியின் னையெங் கேடி
இனசன மெங்கேடி கண்டவி டங்கூறடி
ஒருசனம் அறிமுக மில்லேடி நேரடி

54. நேரடித் தரிசனம் உறவுகள் உபகாரம்
கேளடி கண்மணி அருமை மகளாரே
ஓடடி தேடடி எங்கோடிப் போயினர்
ஓடோடித் தேயாடிப் பேயாடிப் போயினர்.

55. பேயாடிப் போயிந் நுச்சுனா மியலை
ஈயாடிப் போயிந் நுத்தீராக் கவலை
பாராளும் மன்னரும் மற்றோரும் வருகுவர்
தாராளம் பேசுவர் வேறென்ன செய்குவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. செய்தனர் படையின ருதவிக ளாயிரம்
அரசினர் அனுப்பினர் உணவுக ளாயிரம்
வந்தனர் பண்ணாட்டுத் தொண்டர் நிறுவனம்
தந்தனர் உடைகள் மருந்துக ளாயிரம்.

57. ஆயிரம் கம்பளி கள்மாத் திரைகள்
நோய்நீ க்கிமருந் துகள் நாசினிகள்
இன்னும் எத்தனை யோவிதப் பொருட்கள்
பின்னும் குவிந்தன பன்னாட் டுதவிகள்

58. உதவிக ளாயிரம் குவிந்த போதிலும்
பதவியி லுள்ளோர் பகிர்ந்த போதிலும்
இதயமி ழந்தவர் மீண்டு வருவரோ
கதையா னவாழ்வை மீளத் தருவரோ..

59. தருவது மெல்லா மவனது செயல்தான்
வந்ததும் போனதும் அவனது அருள்தான்.
எந்தவி றைவனை ஒப்புக் கொண்டமோ
அந்தவி றைவனே அழித்துக் காப்பதும்

60. அழித்துக் காப்பதில் போதனை பெற்றோம்
விழித்து எழுவோம் வேதனை விட்டோம்
சோதனை வெல்வோம் சாதனை செய்வோம்
சாய்ந்த மருதினை மீளவும் கட்டுவம்

61. கட்டுவம் வீடுகள் கடைகள் கண்ணிகள்
வெட்டுவம் வாய்க்கால் பாலங்கள் தோணிகள்
நட்டுவம் பச்சைகள் நாட்டுப்புற காய்கறிகள்
எட்டுவம் எங்களது ஏற்றமிகு லட்சியங்கள்

62. லட்சியம் கொள்ளுவம் கல்விகள் வளர்ப்பம்
உச்சி மேடெல்லாம் களனிகள் செய்குவம்
உள்ள விடமெல்லாம் கணனிக ளாக்குவம்
அல்லா உதவியால் அகிலங்க ளாளுவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. அகிலங் களழித் தசுனாமிப் பாட்டை
அகிலத் தோருக் கும்பாடிக் காட்ட
அருளிச் செய்தான் அல்லா' பெரியன்
அகிலப் புகழுக்கு மவனே உரியன்

64. அவனே உரியவன் அனைவர் பாட்டுக்கும்
என்னே தீரன் இணையார் ஈட்டுக்கு
இனிதே உரைத்தேன் சுனாமிப் பாட்டிதை
இவனே தீரன் ஆனேன் ஏட்டுக்கு.

65. ஏட்டுக் கடங்கா எழுத்தில் முடியா
பாட்டுக் கடங்காப் பாடியி முடியா
மட்டுக் கடங்கா மரணப் பினாமி
கட்டுக் கடங்கா ஆழிச் சுனாமி.

66. ஆழிச்சு னாமியால் வந்த அழிவை
பாடிச்சு மைகுறை ந்தேன் மகளே..
ஏந்தியி ருகரம் என்றுமி றையிடம்
கேளடி கேளடி கண்ணீரு மேனடி..

67. கண்ணீர் துடைப்பாய் கவலை விடுவாய்
தண்ணீர் ஆழ்ந்த ஆத்மா நினைப்பாய்
கண்ணின் மணியாம் ரஸூலின் மகளாம்
அன்னை பாத்திமா வழியில் நடப்பாய்.

68. நடப்ப வர்நபிவழி நல்லவரும் வாழ்க
படைத்த இறையவன் சொற்படி வாழ்க.
வடித்த காவியம் கேட்டவர் வாழ்க.
படித்தவர் பார்த்தவர் யாத்தவரும் வாழ்க.

என் செல்ல மகளாரே
நான் பாடும் பாட்டினைக் கேளாயோ..
என் செல்ல மகளாரே
நான் பாடும் பாட்டினைக் கேளாயோ..

(காவியம் முற்றிற்று.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PREMIUM GRAPHICS & PRINTERS - 074 0069 589

அபாபீல்கள்

இலக்கியம் படைத்தலும் படைத்ததை பகிர்தலும்

ISBN - 978-955-38657-0
Barcode - 9 789553 865700

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org